பிறைம் லாண்ட்ஸ் ரெசிடன்சீஸ் பீ.எல்.சி யின் அனைத்து பங்குதாரர்களுக்குமான அறிவித்தல்.
2024 ஆனி 28 ம் திகதி மு.ப. 10 மணிக்கு நிகழ்நிலை சந்திப்பு முறையூடாக நடாத்தப்படவுள்ள, நிறுவனத்தின் 19 வது வருடாந்த பொதுக் கூட்டம் தொடர்பான அறிவித்தல்.

# வருடாந்த பொதுக் கூட்டம் தொடர்பான அறிவித்தல்

பிறைம் லாண்ட்ஸ் ரெசிடன்சீஸ் பீ.எல்.சி யின் பங்குதாரர்களின் பத்தொன்பதாவது வருடாந்த பொதுக்கூட்டம் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2024 ஆனி மாதம் 28ம் திகதி மு.ப.10.00 மணிக்கு நிகழ்நிலை சந்திப்பு தளத்தின் மூலம் நடைபெறவுள்ளதனை இத்தால் அறிவிக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

1. பொது விடயங்கள்

1.1 கூட்டம் தொடர்பான அறிவித்தல்

1.2 2024 பங்குனி 31 ல் முடிவடைந்த கணக்காண்டிற்கான இயக்குணர்களின் அறிக்கை, கணக்கு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர்களின் அறிக்கையைப் பெற்று பரிசீலித்தல்

1.3 2024 வைகாசி மாதம் 29 ம் திகதி அறிவிக்கப்பட்ட, 2023/2024 நிதி ஆண்டின் இலாபத்தில் பங்குதாரர்களுக்கு செலுத்திய ரூ. 0.60 இடைக்கால பங்குலாபத்தை, இங்கு கூறப்பட்ட நிதி ஆண்டின் இறுதி பங்குலாபமாக கருத வேண்டும் என்பதனை நிறைவேற்றிக்கொள்வது.

1.4 நிறுவன யாப்பின் 29 (1) (ஆ) பந்திக்கமைய திரு. பதிரகே அநுர விஜேசிறி பெரேரா அவர்களை மீண்டும் இயக்குணராக நியமித்தல்.

1.5 எதிர்வரும் ஆண்டுக்குரிய நிறுவனத்தின் கணக்காய்வாளர்களாக Messrs, BDO Partners பட்டய கணக்காளர்களை மீண்டும் நியமிக்க மற்றும் அவர்களின் கொடுப்பனவினை தீர்மானிக்க இயக்குணர்களுக்கு அதிகாரத்தினை வழங்குதல்.

1.6 2024/ 25 ஆம் ஆண்டுகளுக்குரிய நிறுவனத்தின் அறப்பணி நடவடிக்கைகள் மற்றும் வேறு நன்கொடைகளுக்கான பணத்தொகைகளை தீர்மானிப்பதற்கு இயக்குணர் சபைக்கு அதிகாரம் வழங்குதல்.

2. விசேட விடயங்கள்

கொழும்பு பங்குச் சந்தையின் தற்போதைய சட்ட திட்டங்களுக்கமைவாக, நிறுவனத்தின் சட்ட பிரிவுகளை திருத்தம் செய்வதற்குரிய விசேட பரிந்துரையாக பின்வரும் பரிந்துரைகளை கருத்திற் கொள்வதற்கு மற்றும் பொருத்தமானதாக உணரப்படுமாயின் அனுமதி வழங்குதல்.

"நடைமுறையில் உள்ள 30 வது பந்தியினை முழுமையாக அகற்றி அதற்காக 30 வது பந்தியாக பின்வரும் பந்தி மாற்றீடு செய்வதற்கு விசேட பரிந்துரை இத்தால் அனுமதிக்கப்படுகின்றது.

30. மாற்று இயக்குணர்

(1) விசேட சந்தர்ப்பங்களில், யாராயினும் இயக்குணர் ஒருவருக்கு, பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் பின்வரும் பகுதி (2) இல் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நபருக்காக பதில் வேலை செய்வதற்காக மாற்று இயக்குணர் ஒருவரை நியமிக்க அனுமதி வழங்க முடிவதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட எவருக்கும் இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(அ) மாற்று இயக்குணராக நியமிக்கப்பட்ட ஒருவர், அத்தகைய நியமனத்தைப் பொறுத்தமட்டில், எந்தவொரு சலுகைகள் அல்லது உரிமைகளைப் பெற முடியாது. நேரில் மற்றும் அவரை நியமித்த இயக்குணர் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளாத ஒரு இயக்குணர் சபை கூட்டம் அல்லது துணைக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ளவும், இயக்குணர்கள் மற்றும் நிறுவனத்தின் அனைத்து கூட்டங்களின் அறிவிப்புகளைப் பெறுவதற்கும், இயக்குணராக வாக்களிக்கவும் அவருக்கு உரிமை உண்டு. இயக்குணர்கள் மற்றும்/அல்லது அவரை நியமித்தவரால் விதிக்கப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டு, அத்தகைய இயக்குணர் இல்லாத நிலையில், மாற்று இயக்குணரின் வருகை, அத்தகைய கூட்டத்தின் நோக்கத்திற்காக கணக்கிடப்படும்.

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நடக்கும் வரை, ஒரு மாற்று இயக்குணர் நியமிக்கப்படலாம், அத்தகைய நியமனம் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு (01) வருடத்திற்கு மிகையாகமல் இருக்கும், மேலும் அவர் மாற்று இயக்குணராக இருப்பதை பின்வரும் நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் நிகழும்போது நிறத்துவார், அதாவது:

(i). மாற்று இயக்குணரின் நியமனம், அவரை/அவளை நியமித்த இயக்குணரால், நிறுவனத்தின் அலுவலகத்தில் எழுத்துப்பூர்வமாக வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் ரத்து செய்யப்பட்டால் அல்லது

(ii) மாற்று இயக்குணர்களின் நியமனம் நிறுத்தப்படும் என இயக்குணர்கள் தீர்மானித்தால், இயக்குணர்களின் அத்தகைய தீர்மானத்தின் திகதியிலிருந்து 30 நாட்கள் முடிவடையும் வரை அத்தகைய பணிநீக்கம் நடைமுறைக்கு வராது அல்லது

(iii) நியமனம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நிகழும் போது செய்யப்படும் என்றால் குறிப்பிட்ட காலத்தின் முடிவில் அல்லது அத்தகைய குறிப்பிட்ட நிகழ்வின் போது அல்லது

(iv). சட்டத்தின் 202வது பிரிவின்படி இயக்குனராக இருப்பதற்கு தகுதியற்றவர் அல்லது

(v). நியமனம் செய்யப்பட்டவர் ராஜினாமா செய்கிறார் அல்லது இறக்கிறார்.

(2) ஒரு மாற்று இயக்குணரின் நியமனம் பின்வருவனவற்றிற்கு உட்பட்டது:

(அ) ஒரு நிர்வாகமற்ற இயக்குணர், நிறுவனத்தின் நிர்வாகியை அவருக்கு மாற்றாக நியமிக்கக் கூடாது.

(ஆ) ஒரு சுயாதீன இயக்குணரால் நியமிக்கப்பட்ட ஒரு மாற்று இயக்குணர், பட்டியல் விதிகளால் குறிப்பிடப்பட்ட சுதந்திரத்தின் அளவுகோல்களை பூர்த்தி செய்ய வேண்டும், மேலும் அந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச எண்ணிக்கையிலான சுயாதீன இயக்குணர்கள் தொடர்பான தேவைகளை நிறுவனம் பூர்த்தி செய்ய வேண்டும். நியமனங்கள் மற்றும் ஆளுகைக் குழு, மாற்று இயக்குணராக பரிந்துரைக்கப்பட்ட நபர், அத்தகைய நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு ஒரு சுயாதீன இயக்குணராகத் தகுதி பெறுவார் என்பதை மதிப்பாய்வு செய்து தீர்மானிக்க வேண்டும்.

(3) பட்டியல் விதிகளால் குறிப்பிடப்பட்ட தேவைகளை உள்ளடக்கி மாற்று இயக்குணரை நியமிப்பது தொடர்பான உடனடி சந்தை அறிவிப்பை நிறுவனம் வெளியிட வேண்டும்."

2023/24 ஆண்டறிக்கையின் பிரதியினை பெற்றுக்கொள்ளல்

ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியை, குறிப்பிட்ட படிவத்தை பயன்படுத்தி எழுத்து மூலமாக கோரும் பங்குதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து எட்டு (8) சந்தை நாட்களுக்குள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அனைத்து பங்குதாரர்களும் வருடாந்த அறிக்கைக்கு சமமான அணுகலைப் பெறுவதையும், வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பாரபட்சமின்றி கலந்துகொள்வதையும் உறுதிசெய்ய, சந்திப்பு பற்றிய அறிவிப்பு மற்றும் தொடர்புடைய ஆவணங்களை CSE இணையதளத்தில (https://www.cse.lk/pages/company)profile/company)Profile.component.html?symbol=PLR.N0000) மேலும் எங்கள் நிறுவன இணையதளத்திலும் (https://www.primeresidencies.lk/investor-relation) பார்வையிடலாம். இந்த ஆவணங்களில் ஆன்லைன் தொழில்நுட்பம் மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் (AGM) கலந்துகொள்வதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பதிவு செயல்முறை, ஆன்லைனில் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான பங்குதாரர்களின் விவரங்களைப் பதிவு செய்தல் (பதிவு படிவம்) வழிகாட்டுதல்கள், மற்றும் அச்சிடப்பட்ட 2023/24 ஆண்டறிக்கைக்கான கோரிக்கை படிவம் ஆகியவை அடங்கும்.

இயக்குணர் சபை உத்தரவின்படி
பிறைம் லாண்ட்ஸ் ரெசிடென்சிஸ் பி.எல்.சி

S S P Corporate Services (Private) Limited
(கையொப்பமிடப்பட்டது)

நிறுவனத்தின் செயலாளர்கள்
திகதி: ஆனி 4, 2024

PRIME RESIDENCIES